மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.303/2017

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனகாம்பரம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

10.07.2025 பி.வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊர் திருச்சி மாவட்டம் கஸ்தூரி பாளையம். எனக்கு எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு பின்னிட்டு தான் என் கணவர் குடும்பம் மற்றும் அவர்களது உறவினர்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் கணவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் ஆமாம். நான் தான் இறந்து போன சுப்பிரமணியம் என்பவரின் மனைவி கனகாம்பரம் என்பதை காட்ட ஆதார் அடையாள அட்டையோ பிற அடையாள அட்டைகளையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. சுப்ரமணியம் என்பவரின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் தகப்பனார் பெயர் சின்னச்சாமி. தாயார் பெயர் பொன்னம்மாள். என் கணவருடன் பிறந்தவர் பெயர் சரஸ்வதி, என் கணவரின் தகப்பனார் சின்னச்சாமி என்பவரின் இறப்பு

மற்றும் வாரிசு சான்றிதழ்கள் என் கை வசம் உள்ளது என்றால் சரிதான். அதை இந்த வழக்கில் ஆவணங்களாக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் என் கணவரும் சரஸ்வதியும் உடன் பிறந்தவர்கள் அல்ல என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் நான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. என் சரஸ்வதி என்பவருக்கு புத்தி சுவாதீனம் இல்லை என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் சரஸ்வதிக்கு பாதுகாவலராக இருந்து இந்த வழக்கை நடத்துவதற்கு நீதிமன்றத்தில் இருந்து அனுமதி ஏதேனும் வாங்கி உள்ளேனா என்றால் ஆமாம். எந்த நீதிமன்றத்தில் அனுமதி வாங்கினேன் என்றால் இந்த நீதிமன்றத்தில் தான் அனுமதி வாங்கி உள்ளேன். அவ்வாறு நான் எந்த அனுமதியும் வாங்கவில்லை என்றும் அவ்வாறு அனுமதி வழங்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சரஸ்வதி என்னுடன் வசித்து வருகிறார் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

4. சரஸ்வதிக்கு எந்த ஆண்டிலிருந்து புத்தி சுவாதீனம் இல்லாமல் போய்விட்டது என்றால் பத்து வருடத்தில் இருந்து புத்தி சுவாதீனம் இல்லாமல் போய்விட்டது புத்தி சுவாதீனம் இல்லாத சரஸ்வதிக்கு நாங்கள் வைத்தியம் பார்த்தோம் என்பதற்கான ஆவணங்கள் எதையும் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சரஸ்வதிக்கும் பழனிச்சாமிக்கும் திருமணமான விபரம் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். பழனிச்சாமி குடிபோதைக்கு அடிமையாகி தவறான வாழ்க்கை வாழ்ந்து வந்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல தெரியும். பழனிச்சாமிக்கும் நல்லமுத்து என்பவருக்கும் திருமணம்

நடக்கவில்லை என்று தான் நான் எனது எதிர்வாதத்திலும் எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதனால் வாதி சாமிநாதனின் தகப்பனார் சரஸ்வதியின் கணவர் பழனிச்சாமி தான் என்று என்னால் குறிப்பிட்ட சொல்ல முடியாது என்றால் அது எனக்கு தெரியாது ரங்கசாமி நாயக்கரை எனக்கு நேரில் தெரியுமா என்றால் பார்த்ததில்லை ஆனால் அவரைப் பற்றி கேள்வி பட்டுள்ளேன் விஜயாவை எனக்கு நேரில் தெரியும்.

5. விஜயாவை எனக்கு எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் 30 ஆண்டுகளாக தெரியும். 30 ஆண்டுகளுக்கு முன்பு விஜயாவுக்கு யாருடன் திருமணம் ஆனது அவருக்கு என்ன குழந்தை பிறந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பழனிச்சாமி எந்த தேதியில் இறந்து போனார் என்றால் அது எனக்கு தெரியாது பழனிச்சாமியின் இறப்பிற்கு நான் சென்று இருந்தேனா என்றால் ஆமாம். பழனிச்சாமி இறக்கும் வரை நல்ல ஆரோக்கியமாக திடகாத்திரமாக இருந்தார் என்றால் இல்லை. அவருக்கு என்ன நோய் என்றால் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். பழனிச்சாமியின் இறப்பிற்கு நான் என்ன முகவரிக்கு சென்றேன் என்றால் முத்தூர் ரோடு கிழபுறத்தில் உள்ள வீட்டிற்கு சென்றேன்.

6. அந்த வீடு உள்ள முகவரி என்ன என்றால் அது எனக்கு தெரியவில்லை நான் இறப்பிற்கு செல்லாததால் தான் எனக்கு முகவரி தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமி இறந்த சமயத்தில் யாருடன் குடும்பமாக வசித்து வந்தார் என்றால் தனியாக இருந்து தான் இறந்து போனார் அவர் கூட யாருமே இல்லையா என்றால் ஆமாம் பழனிச்சாமி பற்றியோ அவரது குடும்பத்தை பற்றியோ எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல சரஸ்வதி என் கணவரின் தங்கை கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

7. நானும் சுவாமிநாதனும் பழனிச்சாமியின் சொத்துக்களை மோசடியாக அடைய வேண்டும் என்பதற்காக வஞ்சகமாக கூட்டு கொண்டு சேர்ந்து கொண்டு இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் பழனிச்சாமியின் வீட்டு முகவரி கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியுடன் நான் வஞ்சகக் கூட்டு வைத்துள்ள காரணத்தினால் தான் அவருக்கு ஆதரவாக எனது எதிர் ழக்குரையில் முதல் விசாரணை சாட்சியத்தையும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8. சரஸ்வதி ஜீவனாம்சம் கேட்டு இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தீர்ப்புக்கு பின்னிட்டு 4ம் பிரதிவாதி வரதராஜன் என்பவருக்கு பழனிச்சாமி எழுதிக் கொடுத்த சொத்துக்களை பொறுத்து ஏலத்திற்கு கொண்டு வந்தார்கள் என்றால் இல்லை. ஜீவனாம்ச வழக்கின் தீர்ப்பிற்கு பின்னிட்டு பழனிச்சாமி சொத்துக்களின் மீது நாங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சரஸ்வதி என்னுடன் வசித்து வந்திருந்தால் அவர் தாக்கல் செய்திருந்த ஜீவனாம்சம் வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நன்கு தெரிந்திருக்கும் என்றும் சரஸ்வதியின் உடன் வசித்து வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் சொத்துக்கள் ஏலத்திற்கு வரவில்லை என்று அதைப் பற்றிய விபரம் எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. பழனிச்சாமி வரதராஜ் என்பவருக்கு எழுதி வைத்த சொத்துக்களை பொறுத்து சரஸ்வதி தாக்கல் செய்திருந்த ஜீவனாம்ச வழக்கில் ஏலத்திற்கு கொண்டு வந்து அந்த சொத்துக்களை ஒரு K.R.சுவாமிநாதன் என்பவர் ஏலத்தில் எடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஏலத்தொகை இதுவரை சரஸ்வதியால் பெற்றுக்கொள்ளப்படாமல் என் நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே நாங்கள் சரஸ்வதிக்கு பாதுகாவலராக இருந்திருந்தால் ஜீவனாம்ச தொகைக்காக ஏலம் விடப்பட்ட சொத்துக்களின் ஏலத் தொகையை நாங்கள் நீதிமன்றத்தில் இருந்து அவருக்காக வாங்க

நடவடிக்கை எடுத்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நோக்கமே பழனிச்சாமியின் சொத்துக்களை வாதி உடன் இணைந்து மோசடியாக அடைவது என்பதால் தான் அது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் நாங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. அதனால் தான் ஏதோ ஒரு பழனிச்சாமி மகன் சுவாமிநாதன் என்பவரை சரஸ்வதியின் கணவர் பழனிச்சாமியின் மகன் என்று சொல்லி இந்த வழக்கை பொய்யாக நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல உரிய நீதிமன்றத்தின் அனுமதி பெறாமல் சரஸ்வதிக்காக நான் இந்த வழக்கை நடத்தி வருவதால் எனது எதிர்வாதம் நிராகரிகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(மேற்படி 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையே ஐந்தாம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.07.10 19:01:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்